

சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் அரசு முறை பயணமாக சிங்கப்பூருக்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.5.2023) டி.வி.எஸ். மோட்டார்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சுதர்சன் வேணு மலர்க்கொத்து வழங்கி வரவேற்றார்.



சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (23.5.2023) சிங்கப்பூர் விமான நிலையத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, சிங்கப்பூர் நாட்டிற்கான இந்திய தூதர் பெரியசாமி குமரன் ஆகியோர் மலர்க்கொத்து வழங்கி வரவேற்றார்கள். உடன் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை! அமைச்சர்கள் கே.ஆர். பெரியகருப்பன் - வி.செந்தில்பாலாஜி - அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலை! இன்று

# மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி வே.ஆனந்தம் இல்ல மணவிழா!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்திவைத்து - வாழ்த்தி உரையாற்றுகிறார்!

சென்னை, மே 25-

**சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளரும், பெருநகர சென்னை மாநகராட்சி 176வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி வே.ஆனந்தம் புதல்வி வே. ஆ.அபிநயா-லோ.ஹரிஹரன் ஆகியோரின் திருமணத்தை, இன்று (மே 25), தேவகோட்டையில், கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.**



இம்மணவிழா பற்றிய விபரம் வருமாறு: -

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளரும், 176 வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி வே. ஆனந்தம் - திருமதி ரேவதி ஆனந்தம் ஆகியோரின் புதல்வி வே. ஆ. அபிநயா-பட்டுக்கோட்டை மு.லோகநாதன் - திருமதி ராஜலட்சுமி லோகநாதன் ஆகியோரின் புதல்வர் லோ.ஹரிஹரன் ஆகியோரின் திருமணம், இன்று (25.5.2023 -வியாழக்கிழமை காலை 10.30 மணி அளவில் தேவகோட்டை, ராம்நகரில் அமைந்துள்ள ஸ்ரீ தாய் மஹாலில் நடைபெறுகிறது.

மணவிழாவிற்கு - சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் தலைமை வகிக்கிறார்.

சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன், மின்துறை அமைச்சரும், கரூர் மாவட்டக் கழகச் செயலாளருமான வி.செந்தில் பாலாஜி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா எம்.எல்.ஏ., நாகனி செந்தில்குமார், சு. சேகர், துரை கபிலன், பெரி. பாலமுருகன், கருணாகிட்டு ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

திருமணத்தை - கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

மேலும் மணவிழாவில் - கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர் பாட்ஷா முத்து ராமலிங்கம், முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி. சென்னைப் பெரு நகர மாநகராட்சி மேயர் பிரியாராஜன், துணை மேயர் மு.மகேஷ் குமார், முன்னாள் எம்.எல்.ஏ., கே.ஆர்.இராமசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், காரம்பாக்கம் க. கணபதி, ப.தாயகம் கவி, ஜெ.எம்.எச்.ஹாசன் மௌலானா, எஸ்.மாங்குடி மற்றும் க. தனசேகரன் எம்.சி. வி.அசோக், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நேர்முக உதவியாளர் எம். செந்தில், டாக்டர் மா. சு.இளஞ்செழியன், வேளச்சேரி பி. மணிமாறன் எம்.சி., ஜி.பி.ராஜா, கவிஞர் காசி முத்து மாணிக்கம், பாலவாக்கம், க.சோமு, ஆலப்பாக்கம் கு. சண்முகம், என்.நல்ல சேதுபதி, எஸ். குணசேகரன், பாலவாக்கம் த. விஸ்வநாதன் எம்.சி. பாலவாக்கம் மு. மனோகரன் எம்.சி., வேளச்சேரி எஸ். பாஸ்கரன் எம்.சி., வாசுகி பாண்டியன், இரா.துரைராஜ் எம்.சி., எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி., பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் எம்.சி., வி.இ. மதியழகன் எம்.சி., நொளம்பூர் வே.ராஜன் எம்.சி., கே. கண்ணன் எம்.சி., மு. இராசா எம்.சி., துரை வீரமணி, ஜி.வெங்கடேசன், கரூர் எஸ்.பி.கனகராஜ் எம்.சி., இரா. தயாளன், நாகனி ஆர்.ரவி, வி.பூபால சிங்கம், லே.மு. ரவிச்சந்திரன் அடையாறு பி.ஜே. பாஸ்கர், ஆர்.பாலசுந்தரம், அ.ஹரி கிருஷ்ணன், சைதை சம்பத், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், மேடவாக்கம் ப.ரவி, எம். கே.ஏழுமலை, உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜன், பி.எஸ்.முருகேசன், மின்னல் கந்தப்பன், வீர.கனிமொழி, வ.செல்வகுமார், த.பஷீர் உள்பட பலரும் உள்பட பலரும் மணவிழாவில் கலந்து கொண்டு வாழ்த்துகிறார்கள்.

எம்.விநாயக மூர்த்தி, என்.டில்லிகுமார், ஆர்.கே. சந்திரேஷ், எம்.எஸ். விஸ்வா, வி.சண்முகநாதன், என். நல்லசேதுபதி, செ. பழனியப்பன், சி.சஞ்சீவி, பி.கே. சோம்ராஜ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

கேரள முதல்வர்

# பினராயி விஜயன் பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

சென்னை, மே 25-

கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.



**கேரள மாநில முதலமைச்சரும், எனது அன்புத் தோழருமான பினராயி விஜயன் அவர்களுக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**கேரளத்தின் வெற்றிக் கதையை தனது முழு முயற்சியுடன் இயற்றும் அவர்**

**நீண்ட ஆயுளுடனும் உடல் நலத்துடனும் திகழ விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# ஆவின் நிர்வாகத்தில் கடுமையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்!

## பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் உறுதி

சென்னை, மே 25 -

சென்னை அம்பத்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் ஆவின் பால் பண்ணைகளில் கடந்த மூன்று நாட்களாக பால் வினியோகம் தாமதமாக நடைபெறுவதாக ஊடகங்களில் செய்தி வெளிவந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு 9 மணி முதல் 11 மணிவரை அம்பத்தூர் ஆவின் பால் பண்ணையில் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

தென் மாவட்டங்களிலிருந்து அம்பத்தூர் பால் பண்ணைக்கு கொண்டு வரப்படும் பால் டேங்கர் லாரியின் மேலே ஏறி பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் ஆய்வு செய்தார். டேங்கர் லாரிக்கு போடப்பட்ட சீல் முறையாக போடப்பட்டிருக்கிறதா எனவும் ஆய்வு செய்தார். பால் பதப்படுத்தப்படும் பிரிவு, தரகட்டுப்பாட்டு பிரிவு, பால் குளிரூட்டும் பிரிவு, பாலித்தீன் பைகளில் பேக்கிங் செய்யப்படும் பகுதி, பால் டப்களை சுத்திகரிக்கும் பகுதி, ஆவின் சந்தாதாரர்கள் மற்றும் ஒப்பந்த தாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் பால் கொண்டு செல்லும் வாகனங்களையும், கணினி வாயிலாக போடப்பட்ட பில்களையும் ஆய்வு செய்தார். ஒப்பந்த ஊழியர்களின் வருகைப் பதிவேடு, பெயர் விவரம் ஆகியவற்றை கேட்டு அறிந்து ஆய்வு செய்தார். குளிர் பதப்படுத்தப்பட்டு பேக்கிங் செய்யப்படும் இடத்தில் பாலித்தீன் பைகளின் தரம் மற்றும் பேக்கிங் செய்யப்படும் கருவிகள் முறையாக வேலை செய்கிறதா எனவும் ஆய்வு செய்தார்.







